මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/HRD/120/GB/Cir/2019
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2019.04.08

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 02/2019**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்

## பால்நிலை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு தொடர்பான தரவு மற்றும் தகவல்களை சேகரித்தல் மற்றும் ஒவ்வொரு அமைச்சிலும் "பால்நிலை தகவல் மையம்" ஒன்றினைத் தாபித்தல்

இலங்கைப் பெண்களின் சமூக, பொருளாதார அந்தஸ்த்தானது ஏனைய நாடுகளில் வாழ்கின்ற பெண்களைவிட உயர்வானதுடன் ஏனைய பல்வேறு சுகாதார மற்றும் சமூக பொருளாதார சுட்டிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளை ஒத்ததாக காணப்படுகின்றது. இந்த முன்னேற்றமானது எமது நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் செயற்படுத்தப்பட்ட இலவசக் கல்வி மற்றும் சுகாதாரக் கொள்கைகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அடையப்பட்டதாகும்.

02. இலங்கைக்கான 2030 இன் 05 ஆம் இலக்க ஐக்கியநாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்கானது அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுவதுடன் பால்நிலை சமத்துவத்தினை அடைந்து கொள்வதற்கான தேவைப்பாடுகளை சுட்டிக்காட்டுகின்றன. இதற்கமைவாக, முதற்கட்டமாக நிலையான அபிவிருத்தி இலக்குகளை உள்நாட்டுக்கேற்ற வகையில் 2018 வரவு செலவுத்திட்ட அழைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நேரடியாக தேவைப்படுத்தப்பட்ட 12 பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த வகையில் உங்களது அமைச்சுடன் தொடர்பான 12 பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பான தரவுகளை 2019.06.30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

03. நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களைக் கருத்திற்கொண்டு பொருளாதார ரீதியாகவும் மற்றும் சமூக ரீதியாகவும் பெண்களை வலுவூட்டுவதற்கான பல்வேறு அடிப்படை முன்மொழிவுகள் 2019 வரவு செலவுத்திட்ட உரையில் கௌரவ நிதி அமைச்சரினால் முன்மொழியப்பட்டது. இதற்கமைவாக, 2019 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட உரையின் 160 ஆவது பந்தியின் கீழ் பால் நிலை

அடிப்படை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு தொடர்பான கொள்கை உருவாக்கல் மற்றும் செயற்படுத்துகை பற்றிய தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிப்பதற்கு வசதியளிப்பதற்காக ஒவ்வொரு அமைச்சிலும் பால்நிலை தகவல் மையமொன்றினை தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இந்த வகையில் இவ்வாறான தகவல் மையங்கள் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சுடன் ஒருங்கிணைந்து தாபிக்கப்படுதல் வேண்டும். இதற்கமைவாக உங்களது அமைச்சின் பால்நிலை தகவல் மையமானது உங்களது அமைச்சின் பணிகள் மற்றும் கடமைகளுக்கேற்ப செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்பான தரவுத்தளம் மற்றும் தகவல் முறைமையினை பேணுதல் வேண்டும். உதாரணமாக, ஒவ்வொரு அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டுவரும் சுகாதாரம், கல்வி, நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயனாளர்களின் பட்டியல்கள் தனித்தனியாக பேணப்படுதல் வேண்டும். மேலும், அத்தகைய தகவல்களை ஒவ்வொரு வருடத்தினதும் யூலை மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சுக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

04. ஒவ்வொரு அமைச்சும் அவற்றினது பணிகள் மற்றும் கடமைகளுக்கேற்ப உருவாக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கைப் பெண்களின் சமூக – பொருளாதார வாய்ப்புக்களை விரிவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அவர்களது சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளை குறைத்தல் வேண்டும்.

**ஒப்பம் /ஏ.ஆர் தேசப்ரிய**
**திறைசேரியின் செயலாளார் (பதில்)**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்